| **UG–119** | **BTM-11** |
|---|---|

B.A., DEGREE EXAMINATION –
DECEMBER, 2018

First Year

தமிழ்

இக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. பாரதியார் எந்த ஆண்டு, எங்குப் பிறந்தார்?

2. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

3. பாரதி யாருடைய பகுத்தறிவுக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டார்?

4. ஆட்டனத்தி, ஆதிமந்தி ஆகியோர் வாழ்ந்த காலம் எது?

5. நல்லிடிக்கோன் எப்பகுதியை ஆண்டார்?

6. இறால் பண்ணையால் ஏன் சூழல்மாசு ஏற்படுகிறது?

7. முருகன் எந்த நிலத்திற்குரிய தெய்வம்?

8. வருணனை என்றால் என்ன?

9. பரிதிமாற் கலைஞர் என அழைக்கப்பட்டவர் யார்?

10. நாடகத்தில் தொடக்கம் குறித்து எழுதுக.

11. புவன முழுதுடையாள் யார்?

12. புதுமைப்பித்தனின் தந்தை, தாய், பெயர் என்ன?

13. பொன்னகரம் சிறுகதையின் ஆசிரியர் யார்?

14. ஞானபீடம் என்ற விருதினைப் பெற்ற நாவலாசிரியர் யார்?

15. பாத்திரப்படைப்பின் வகைகள் யாவை?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை தருக.

16. பாரதியின் புதுச்சேரி வாழ்கையைக் கூறுக.

17. இருண்ட வீட்டின் குறிக்கோள் யாது?

18. ஆட்டனத்தியின் கலை ஈடுபாட்டைக் கூறுக.

19. பண்பாடு என்றால் என்ன?

20. அகிலனின் புனை கதைப்படைப்புகள் சிலவற்றைக் கூறுக.

21. மு.வ.வின் உரைநடைத்தன்மைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

22. பின்னோக்கு உத்தி என்றால் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. பாரதி குயில் பாட்டின்மூலம் இயற்கையை எவ்வாறு வருணிக்கிறார்?

24. இருண்டவீட்டுக்கதைத் தலைவியின் பண்பு நலன்களை எழுதுக.

25. நீர், நிலம், மாசு குறித்து நும் பாடப் பகுதி வழி ஆராய்க.

26. இயந்திரத்தனமான வாழ்க்கையிலிருந்து விடுபட மு.வ. கூறும் சிந்தனைகள் யாவை?

27. புதுமைப்பித்தனின் எள்ளற்பண்பிற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

28. தமிழில் புதின இலக்கியத்தின் வளர்ச்சி நிலையைக் கூறுக.

29. கதைப்பின்னலின் வகைகளைக் கூறி விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. குயில் பாட்டில் காணலாகும் இயற்கை வருணனைகளை விளக்குக.

31. இருண்ட வீடு எவ்வாறு இருந்தது? ஏன்?

32. திரு.வி.க. முருகனை எவ்வாறு காண்பதாகக் கூறுகிறார்? விளக்குக.

33. புதுமைப்பித்தன் சிறுகதைகள் உணர்த்தும் மனித நேயத்தை புலப்படுத்துக.

34. கு. அழகிரிசாமியின் இலக்கிய ஆளுமைகளைத் தொகுத்து எழுதுக.

| | |
|---|---|
| **UG–120** | **BTM-12** |

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER 2018.

First Year

தமிழ்

இலக்கணம் - 1 (நன்னூல், எழுத்து, சொல்)

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. பொதுப்பாயிரம் என்றால் என்ன?

2. எழுத்துக்களின் வகைகள் யாவை?

3. பகுபதம் என்றால் என்ன?

4. புணர்ச்சியின் வகைகள் யாவை?

5. உயிரீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன?

6. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி என்றால் என்ன?

7. சாரியை வரும் விதங்களைக் கூறுக.

8. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன?

9. ஓரெழுத்து ஒரு மொழி குறிப்பு வரைக.

10. மகரக் குறுக்கம் என்றால் என்ன?

11. எழுத்தியலுக்குப் புறனடையாக நன்னூல் கூறுவது யாது?

12. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

13. மொழி மாற்றுப் பொருள் கோள் என்றால் என்ன?

14. எகினப்புள், எகின்சிறை - புணர்ச்சி நிலையை விளக்குக.

15. குற்றியலுகரப் புணரியல் என்றால் என்ன?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை எழுதுக.

16. நூன்மரபு, மொழி மரபு - பெயர்க் காரணம் தருக.

17. உடம்படுமெய் என்றால் என்ன?

18. செப்பின் வகைகளைக் கூறுக?

19. தடுமாறு தொழிற்பெயர் என்றால் என்ன?

20. விடை எத்தனை வகைப்படும்? அவை? யாவை?

21. ஒரு மொழிச் சொல் - சான்று தருக.

22. பண்புத் தொகையை விளக்கிச் சான்று தருக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

23. நூலிற்கு அழகு எனும் பத்து - எவை?

24. எழுத்துக்களின் வகையை விளக்குக.

25. அளபெடைப் பெயர்கள், முறைப்பெயர்கள் எவ்வாறு விளியேற்கும்?

26. காலவழுவமைதியாக வினையியல் கூறும் செய்திகளை எழுதுக.

27. உம் என்ற இடைச்சொல் எவ்வெப்பொருளில் வரும்? சான்று தருக.

28. ஆறாம் வேற்றுமையின் பொருள்கள் யாவை?

29. எழுத்தின் சாரியைகளை நன்னூல் வழி நின்று விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை எழுதுக.

30. இடைநிலையின் இலக்கணம் கூறி அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

31. திசைப் பெயர்களின் புணர்ச்சியைச் சான்றுடன் விளக்குக.

32. அகர ஈற்றுச் சொற்கள் புணரும் பாங்கைச் சான்று தந்து விளக்குக.

33. எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி நிலைக்குச் சான்று தந்து விளக்குக.

34. மொழி முதல், மொழி இறுதி எழுத்துக்களை பட்டியலிட்டுச் சான்று தந்து விளக்குக.

———————

| UG–121 | BTMAL-11 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – DECEMBER, 2018

First Year

தமிழக வரலாறும் பண்பாடும் (சார்புப்பாடம்)

Time : 3 hours                                        Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்தனுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளுள் இரண்டனைக் கூறுக.

2. ‘எரித்ரியக் கடலின் பெரிப்ளூஸ்’ என்ற நூலை எழுதியவர் யார்?

3. விசித்திரசித்தன் என்று அழைக்கப்பட்டவர் யார்?

4. சோழ பரம்பரையின் ஆட்சியைத் தொடங்கியவர் யார்?

5. திராவிட சங்கத்தை நிறுவியவர் யார்?

6. ‘சித்திரகாரப்புலி’ என்று பாராட்டப்படும் மன்னர் யார்?

7. இராசராசசோழன் பெற்ற மாபெரும் வெற்றியாகக் கருதப்படுவது எது?

8. தொல்காப்பிய உரையாசிரியர் இருவரைக் குறிப்பிடுக.

9. சிதம்பரம் கோயிலில் பொன்னம்பலம் கட்டியவர் யார்?

10. பிற்காலப் பாண்டியருள் சிறப்பிடம் பெற்றவர் யார்?

11. மணிப்பிரவாளநடை என்றால் என்ன?

12. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் எது?

13. சென்னையில் நாணயம் அச்சிடப்பெற்ற சாலையின் பெயர் யாது?

14. முதன்முதலில் சென்னையில் மக்கள்தொகை கணக்கிடப்பட்ட ஆண்டு எது?

15. பெரியார் தொடங்கிய இதழ் எது?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒருபத்தி அளவில் விடை தருக.

16. 'பெருங்கற்புதைவுகள்' என்று அழைக்கப்படுவன எவை?

17. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட இரு நகரங்கள் எவை?

18. தேவாரம் பாடியோர் யார்?

19. பிரமதேயம் என்றால் என்ன?

20. நிசும்பசூதினி ஆலயம் யாரால் எதற்காகக் கட்டப்பட்டது?

21. சூதர், மாகதர் என்போர் யாவர்?

22. காந்தியடிகள் தொடங்கிய அறப்போராட்டங்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்துனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. பழந்தமிழகத்தில் நடைபெற்ற வாணிகம் குறித்து விளக்குக.

24. ‘சுந்தரர்’ – குறிப்பு வரைக.

25. ‘நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்’ – குறிப்பு வரைக.

26. ‘குடவோலை முறை’ – குறித்து விளக்குக.

27. சோழர்காலத்தில் விதிக்கப்பட்ட வரிகள் குறித்து விளக்குக.

28. ‘கிருஷ்ணதேவராயர்’ – குறிப்பு வரைக.

29. இரட்டையாட்சி முறை குறித்து விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. தமிழக வரலாற்றை அறிய உதவும் அடிப்படைச் சான்றுகள் எவை? விளக்கியுரைக்க.

31. பல்லவர்காலக் கலை வளர்ச்சிக் குறித்து விவரிக்க.

32. சோழர் காலச் சமுதாய நிலையை விவரிக்க.

33. நாயக்கர்தம் ஆட்சிமுறைமை குறித்து விவரிக்க.

34. விடுதலை பெற்ற தமிழகத்தின் நிலையை விவரிக்க.

| **UG-132** | **BLT-12** |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION – DECEMBER, 2018.

First Year

தமிழ் கற்பித்தல்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.

1. உணர்ச்சியின் நிலைக்களன்கள் எவை?

2. கல்வித்துறையில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஊடகக் கருவி எது?

3. கற்றலில் விளையாட்டு முறையைக் கண்டறிந்தவர் யார்?

4. 'பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள்' என்ற நூலை எழுதியவர் யார்?

5. மொழியைக் கற்க எத்தகைய திறன் தேவைப்படுகிறது?

6. படிப்பைத் துவங்குவதற்கான வயது வரம்பினைக் கூறுக.

7. மொழி கற்றலில் முதன்மையான இடத்தைப் பெறுவது எது?

8. தமிழ் உரைநடை எத்தனை வகைப்படும்?

9. துணைப்பாடம் எத்தன்மையினை வளர்க்கும்?

10. தமிழ் நூல் என்ற சொல் எதனைக் குறிக்கிறது?

11. ‘திட்டமிட்டதைக் கற்றல்’ என்ற நூலின் ஆசிரியர் யார்?

12. இலக்கியப் படிப்பிற்கு நுழைவாயில் எது?

13. பாட நூல்களில் படங்கள் இடம் பெற வேண்டும் எனக் கூறியவர் யார்?

14. தொல்காப்பியத்திற்கு உரையெழுதியவர்களில் பழமையானவர் யார்?

15. அயல் மொழிப் படிப்பிற்குத் தாய்மொழியே உதவும் எனக் கூறியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.

16. தாய்மொழியின் பயன்பாட்டுத் துறைகள் இரண்டினைக் கூறுக.

17. கூட்டுக் குழுத்திட்டம் என்றால் என்ன?

18. நகைச்சுவைக் கதைகள் இரண்டினைக் கூறுக.

19. எழுத்துப்பிழை ஏற்படக் காரணம் என்ன?

20. மொழிக் கல்வியில் பெற வேண்டிய இரு புலமைகள் யாவை?

21. மொழியில் ஏற்படும் குறுக்கீடுகளை கூறுக.

22. ஆறுமுக நாவலர் இயற்றிய இரண்டு நூல்களின் பெயரினைக் கூறுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.

23. தாய் மொழி கற்பித்தலின் நோக்கங்களை வெளிப்படுத்துக.

24. குழந்தைப் பாடல்களின் முக்கியத்துவத்தினை விளக்குக.

25. எழுத்துக் கட்டுரை கற்பித்தலின் தேவை குறித்து எழுதுக.

26. கல்வியியல் மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் யாவை?

27. 'தரத் தொடர்புக் கெழு' – குறிப்பு வரைக.

28. நிரல் வழிக் கற்றல் என்றால் என்ன? விளக்குக.

29. உ.வே. சாமி நாதய்யர் – குறிப்பு வரைக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

30. மேற்பார்வைப் படிப்பு முறை குறித்துக் கட்டுரை எழுதுக.

31. கட்டுரைப் பாடம் கற்றலின் விதிமுறை, திருத்தும் முறைகளை விரிவாக எழுதுக.

32. இலக்கணம் மொழிக்குத் தேவையா? நிறுவுக.

33. மொழியாசிரியருக்குத் தேவையான பண்புகளைப் பட்டியலிடுக.

34. நல்ல பாடநூலின் பண்புகள் குறித்து எழுதுக.

| | UG–137 | BLT–11 |
|---|---|---|

# B.Litt. DEGREE EXAMINATION – DECEMBER 2018

## First Year

### மொழியியல்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. தமிழில் உள்ள கூட்டொலிகள் எவை?

2. மடிநா ஒலிகள் எவை?

3. உடம்படுமெய்கள் – எவை?

4. 'கோழி' என்பது தமிழர்களின் பேச்சுவழக்கில் எங்ஙனம் திரிபடைகிறது?

5. தமிழில் வழங்கும் படர்க்கை இடப்பெயர்கள் எவை?

6. இருதிணைகள் எவை?

7. திரிபு இல்லாத பெயராக வருவது எந்த வேற்றுமை?

8. சுட்டெழுத்துக்கள் எவை?

9. வினாப் பெயர்கள் எங்ஙனம் உருவாகும்?

10. 'எழுதி விடு' – இதில் துணை வினையாக வருவது எது?

11. எச்சம் எத்தனை வகைப்படும்?

12. ஒரு சொல்லே வாக்கியமாக அமைவதற்குச் சான்று தருக.

13. 'கழகம்' – இச்சொல் முன்பும், இப்போதும் உணர்த்தும் பொருளை எழுதுக.

14. இரண்டு இதழ்களும் சேரப் பிறக்கும் ஒலிகள் எவை?

15. சொற் பிறப்பு ஆராய்ச்சி என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. வகையொலி என்றால் என்ன? சான்று தருக.

17. ஒலியழுத்தம் என்றால் என்ன?

18. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன?

19. அடிச்சொற்களோடு சேரும் உறுப்புக்கள் எவை?

20. ஏழாம் வேற்றுமை உருபாகத் திராவிட மொழிகளில் வழங்குவன எவை?

21. ‘வரைந்தான்’ – இவ்வினைமுற்று மூலம் நீவிர் அறிவன யாவை?

22. ‘இரட்டைக்கிளவி வினை’ – சான்று தருக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. உயிரொலிகளை மொழியியலார் எங்ஙனம் பாகுபடுத்துவர்?

24. ‘உயிரொலி இயைபு’, ‘உயிர் இடம்பெயரல்’ – விளக்குக.

25. தன்மைப் பன்மையின் இருவகைகள் குறித்து விவரிக்க.

26. ‘கால இடைநிலைகள்’ – குறிப்பு வரைக.

27. வினையாலணையும் பெயர் குறித்து மு.வ. கூறுவன யாவை?

28. எதிர்மறை வினை எங்ஙனம் உருவாகும்?

29. ‘திணை–பால் இயைபு’ – குறிப்பு வரைக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. அடிச்சொற்கள் குறித்துக் கட்டுரை வரைக.

31. மெய்யொலிகளை மொழியியல் அடிப்படையில் பாகுபடுத்துக.

32. திராவிட மொழிகளில் மூவிடப்பெயர்கள் அமைந்துள்ள முறைமையை ஆய்க.

33. தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்றும் முறைகளை விளக்கியுரைக்க.

34. காலந்தோறும் சொற்கள் பொருள் உணர்த்தும் முறை மாறுபடும் என்பதனைச் சான்றுகளுடன் விவரிக்க.